ஸ்ரீநகர்,ஜூலை.23–

வன்முறை சம்பவங்களால் பாதிக்கப்பட்டுள்ள ஜம்மு–காஷ்மீர் மாநிலத்தில் சட்டம்ஒழுங்கு நிலைமை மற்றும் பாதுகாப்பு அம்சங்கள் தொடர்பாக ஆய்வு செய்வதற்காக மத்திய மந்திரி ராஜ்நாத் சிங் இன்று காஷ்மீர் செல்லும் நிலையில் இங்குள்ள நான்கு மாவட்டங்களில் பிறப்பிக்கப்பட்டிருந்த ஊரடங்கு உத்தரவு தளர்த்தப்பட்டுள்ளது. மாநிலத்தின் பல பகுதிகளில் அமைதியான இயல்பு நிலை நீடிப்பதால் காஷ்மீரின் பண்டிப்போரா, பாரமுல்லா, பட்காம், கண்டேர்பால் மாவட்டங்களில் பிறப்பிக்கப்பட்டிருந்த ஊரடங்கு உத்தரவு இன்று தளர்த்தப்பட்டுள்ளதாக போலீஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

எனினும், போலீஸ் சட்டப்பிரிவு 144ன்படி நான்குக்கு மேற்பட்ட நபர்கள் கூடுவதற்கான தடை தொடர்ந்து அமலில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அனந்த்நாக், குல்காம், குப்வாரா, புல்வாமா, சோபியான் ஆகிய மாவட்டங்களில் ஊரடங்கு உத்தரவு தொடர்ந்து அமலில் இருக்கும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# 4 பேர் உடல் நசுங்கி பலி



திருவண்ணாமலை, ஜூலை 23–

திருவண்ணாமலை–திருக்கோயிலூர் செல்லும் சாலை, சு.வாளவெட்டி பகுதியில் இன்று அதிகாலை 4 மணியளவில் பழுதாகி நின்ற தனியார் பஸ் மீது லாரி மோதிய விபத்தில் 4 பேர் உடல் நசுங்கி பலியானார்கள். மேலும் 18 பேர் படுகாயமடைந்தனர்.

தருமபுரி மாவட்டம் பாலகோடு பகுதியைச் சேர்ந்தவர்கள் சுற்றுலா செல்வதற்காக நேற்று இரவு தனியார் பேருந்தில் புறப்பட்டனர். இன்று அதிகாலை 4 மணியளவில் திருவண்ணாமலை–திருக்கோயிலூர் நெடுஞ்சாலையில் சென்று கொண்டிருந்தபோது பேருந்து பழுதாகி சாலையோரம் நின்றுகொண்டிருந்தது. அப்போது பெரும்புதூரிலிருந்து கண்ணாடி லோடு ஏற்றிவந்த லாரி நின்று கொண்டிருந்த பேருந்தின் பின் பக்கமாக வேகமாக மோதியது.

இந்த விபத்தில் பஸ்சில் பயணம் செய்த சென்னியம்பட்டி கிராமத்தைச்சேர்ந்த முருகன் (27), முனியன் (50), நாகராஜன் (37), புளிகரை கிராமத்தை சேர்ந்த முருகேசன் (40) ஆகியோர் சம்பவ இடத்திலேயே உடல் நசுங்கி பரிதாபமாக பலியாகினர். 18 பேர் படுகாயமடைந்தனர். படுகாயமடைந்த 18 பேரும் திருவண்ணாமலை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

விபத்து குறித்து வெறையூர் போலீசார் வழக்கு பதிவு செய்து லாரி ஓட்டுனர் அருண்குமாரை கைது செய்து விசாரித்து வருகின்றனர். மேலும் விபத்தில் இறந்த 4 பேரின் உடல்களை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக திருவண்ணாமலை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.


equitas

## எக்விடாஸ் ஹோல்டிங்ஸ் லிமிடெட்

(முந்தைய பெயர், ''எக்விடாஸ் ஹோல்டிங்ஸ் பிரைவேட் லிமிடெட்'')

பதிவு அலுவலகம்: 410A, 4வதுமாடி, ஃபேஸ் II, ஸ்பென்ஸர் ப்ளாசா, எண். 769, மவுண்ட் ரோடு, அண்ணாசாலை, சென்னை 2

CIN: U65100TN2007PLC064069 | Ph: 044 4299 5000 | www.equitas.in

### ஜூன் 30, 2016 வரை முடிவடைந்த மூன்று மாதத்திற்கான தனிப்பட்ட மற்றும் ஒட்டு மொத்த தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள்

(₹ லட்சத்தில்)

| வ. எண் | விபரங்கள் | தனிப்பட்ட முடிவுகள் | | | ஒட்டு மொத்த முடிவுகள் | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | முடிவடைந்த மூன்று மாதங்கள் 30 ஜூன் 2016 | முடிவடைந்த ஆண்டு 31 மார்ச் 2016 | முடிவடைந்த மூன்று மாதங்கள் 30 ஜூன் 2015 | முடிவடைந்த மூன்று மாதங்கள் 30 ஜூன் 2016 | முடிவடைந்த ஆண்டு 31 மார்ச் 2016 | முடிவடைந்த மூன்று மாதங்கள் 30 ஜூன் 2015 |
| | | தணிக்கை செய்யப்படாதது | தணிக்கை செய்யப்பட்டது | தணிக்கை செய்யப்பட்டது | தணிக்கை செய்யப்படாதது | தணிக்கை செய்யப்பட்டது | தணிக்கை செய்யப்பட்டது |
| 1 | செயலாக்கங்களிலிருந்து மொத்த வருமானம் | 223.80 | 819.72 | 240.28 | 34,811.62 | 111,093.14 | 23,888.34 |
| 2 | இக்காலம் / ஆண்டுக்குரிய நிகர இலாபம் வரிக்கு முந்தையது, விலக்கானவை மற்றும் / அல்லது அசாதாரண வகைகள் | 62.79 | 384.06 | 135.06 | 9,634.06 | 26,011.96 | 5,809.22 |
| 3 | இக்காலம் / ஆண்டுக்குரிய நிகர இலாபம் வரிக்கு பிந்தைய, விலக்கானவை மற்றும் / அல்லது அசாதாரண வகைகள் பிறகு | 62.79 | 384.06 | 135.06 | 9,634.06 | 26,011.96 | 5,809.22 |
| 4 | இக்காலம் / ஆண்டுக்குரிய நிகர இலாபம் வரிக்கு பிறகு விலக்கானவை மற்றும் / அல்லது அசாதாரண வகைகள் பிறகு | 28.02 | 211.63 | 82.08 | 6,117.27 | 16,714.18 | 3,738.47 |
| 5 | சமபங்கு மூலதனம் | 33,574.13 | 26,992.04 | 26,890.82 | 33,574.13 | 26,992.04 | 26,890.82 |
| 6 | காப்புநிதிகள் மறுமதிப்பீட்டு காப்புநிதிகள் தவிர்த்து (முந்தைய ஆண்டின் இருப்பு நிலை அறிக்கையில் காண்பித்துள்ளபடி) | – | 69,158.54 | – | – | 107,143.23 | – |
| 7 | பங்கு ஒன்றுக்கான வருவாய் தொடர்ச்சி மற்றும் தொடரப்படாத செயலாக்கங்களுக்கான மூன்று மாத முடிவில் வருடத்திற்கு அல்லாத | | | | | | |
| (i) | அடிப்படை (₹) | 0.01 | 0.08 | 0.03 | 1.91 | 6.21 | 1.39 |
| (ii) | குறைமதிப்பு (₹) | 0.01 | 0.08 | 0.03 | 1.86 | 6.19 | 1.39 |

**குறிப்பு:** மேற்குறிப்படப்பட்டவைகள் 2015-ம் வருடத்திய **SEBI** விதிமுறைகளில் 33-வது விதிமுறையின் கீழ் (பொறுப்புகளை பட்டியலிடுதல் மற்றும் தேவைகளை வெளிப்படுத்துதல்) பங்கு வர்த்தக நிறுவனத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள காலாண்டு / ஆண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் தேர்ந்தெடுக்கப்பட்டவைகள் ஆகும். காலாண்டு / ஆண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் முழு படிவமும் கம்பெனியின் **www.equitas.in** என்ற இணையதளத்திலும், பங்குவர்த்தக நிறுவனத்தின் **www.nseindia.com, www.bseindia.com** என்ற இணையதளங்களிலும் காணலாம்.

இயக்குனர்கள் குழு சார்பாக
sd. P N வாசுதேவன்
நிர்வாக இயக்குனர்

இடம் : சென்னை
தேதி : 22 ஜூலை 2016


மக்கள் குரல் – 23-07-2016